பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்ததுபற்றிய குறிப்புதான் இங்கே தரப்பட்டிருக்கிறது.

திரு. என் வரதராஜன்: இப்படி சில முக்கியமான தொழிற் சாலைகளின் கழிவுநீர் வெளியேறி விவசாயத்தைப் பெரிதும் பாதிக்கிறது. ஆகவே இனி லைசென்சு கொடுக்கிறபோதே விஞ்ஞான முறையில் கழிவு நீரை நல்ல நீராக மாற்றித்தான் வெளியேவிட வேண்டும் என்கிற கட்டுப்பாட்டை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: விவசாயத்தையோ, கிராம குடிதண்ணீர் வசதியையோ பாதிக்காத வகையில்தான் கழிவுநீர் வெளியேற்றப்பட இப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த இடத்தில் கூட 16 அடி வட்டமுள்ள கிணறு தோண்டி விடவும், வறண்டு கிடக்கிற வாய்க்கால் வழியே செலுத்தவும் நடவடிக்கை எல்லாம் எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 658, 659, 660 பின்னால் எடுத்துக்கொள்ளப்படும்.

சி. சாத்தமங்கலம் அரிசன நலப்பள்ளி கட்டடம்

* 661 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, சி. சாத்தமங்கலம் கிராமம், அரிசன நலப்பள்ளிக் கட்டடம் கட்டி முடித்த தேதி என்ன?

(இ) மேற்கண்ட கட்டடத் திறப்பு விழா நடந்த தேதி என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) 30—9—1967-ல் தற்காலிகக் கூரை ஒன்று மட்டும்தான் ஐந்தாயிரம் ரூபாயில் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) குறிப்பிட்ட ஒரு திறப்பு விழா எதுவும் நடைபெற வில்லை.

திரு. எஸ். சிவசுப்ரமணியன்: இது போன்ற சாதாரண கொட்டகை கட்டுவதனால் மழைக் காலங்களில் வீணாகிவிடுகிறது. நல்லதொரு கட்டடம் கட்ட நம் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாவட்ட அரிசன நல அதிகாரி இதுபற்றி சர்க்காருக்கு ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறார். இதுபற்றி கவனிக்கப்படும்.

* 662 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு வேளாண்மை ,அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970 ஏப்ரல் 3]

தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் தேவங்குடி கிராமம், கடலூர் வட்டம், வரக்கால்பட்டு கிராமம் ஆகியவற்றில் ஹரிஜன காலனி அமைப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமான புகார்கள் அரசுக்கு ஏதாவது வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்

திரு. சி. கோவிந்தராஜன் : அப்படிப்பட்ட புகார்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது? அரிசனங்களுககாக வீடு கட்டுவதற்கு ஸ்பெஷல் தாசில்தார் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அந்த இடத்திற்குச் சொந்தமான பெரிய நிலச்சுவாந்தார் மறுப்பதன் காரணமாக வேறு இடத்திற்கு மாற்ற ப்ரபோசல் செய்கிறார்களே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : என்னிடத்தில் உள்ள குறிப்பில் இருதரப்பாரும் மாறிமாறி புகார் செய்து கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. அரிசனங்களுக்கு காலனி அமைக்க நான்கு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இடத்தைவிட நிலக்காரர்கள் மறுக்கிறார்கள். இல்லை என்றால் அரிசனங்கள் அந்த இடம் வேண்டாம் என்று மறுக்கிறார்கள். இதனாலேயே காலதாமதம் ஏற்படுகிறது.

குறிப்பாக முதலில் சர்வே நம். 145-1, 142-2, 3, 149-4-ஏ ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இரண்டாவதாக சர்வே நம். 91-1, 92-2, 94-2 ஆகிய இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். இந்த இடத்திற்குப்போக அரிசனங்கள் மறுத்து விட்டார்கள்.

மூன்றாவதாக சர்வே நம். 130-1, 130-2 ஆகிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடத்திற்குப்போகவும் மறுத்து விட்டார்கள். இது எல்லாம் பனங்காட்டைச் சேர்ந்தது.

அடுத்து விருத்தாசலம் வட்டம் தேவங்குடி கிராமத்தில் சர்வே நம். 11-1, 2, 3, 4, 5 ஆகிய இடங்களை மொத்தம் 2.98 ஏக்கரா நிலத்தை எடுக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. நிலக்காரர்களிடம் இருந்தும் பல எதிர்ப்புகள் வந்தன. ஆயினும் பரிசீலனை செய்ததில் ஆட்சேபணைக்குக் காரணம் இல்லை என்பதாக இப்போது முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. பி. வேலுசாமி : அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தென்னாற்காடு மாவட்டத்தில் மனைக்கட்டு வழங்குவது பற்றிய கேள்வி. வீடு கட்டுவது அல்ல.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறிப்பிட்ட இடத்தை எடுக்க நிலக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். கட்டாய ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, எதிர்க்கிறார்கள் என்று கைவிடுவானேன் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நிலக்காரர்கள் மறுக்கிறபோது, அங்கே குடியேறினால் தங்களுக்கு என்ன கெடுதி ஏற்படுமோ என்று அரிசனங்களும் அங்கே குடியேற அஞ்சுகிறார்கள். ஆகவே நிலக்காரர்கள் எதிர்ப்பையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : அரிசனங்களுக்கு மனைநிலம் ஆர்ஜிதம் செய்கிறபோது நிலக்காரர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். வழக்கு முடிய 3 வருடம், 4 வருடம் ஆகிவிடுகிறது. ஸ்டே கொடுத்தால் மூன்று, ஆறு மாதங்களுக்குள் முடியவேண்டும் என்று சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படி இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் 700 வழக்குகளுக்கு மேல் இருந்தன. இந்த அரசாங்கம் வந்த பிறகு வழக்குகளை துரிதப்படுத்தவேண்டும் என்று சொல்லியதன் காரணமாக பல வழக்குகள் முடிந்துவிட்டன. ஒருசில வழக்குகள் இருக்கின்றன. அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

திரு. நா. வீராசாமி : நில ஆர்ஜிதம் செய்யும்போது நிலத்திற்கு ஈடாக கடைசியாக ரிஜிஸ்தர் செய்த விலை கொடுப்போம் என்கிறார்கள். நிலக்காரர்கள் அன்றைய மார்க்கெட் விலை கேட்கிறார்கள். இப்போது அரசாங்கமே அங்கங்கே ஒரு விலை நிர்ணயித்து வருகிறது. இந்த விலை அடிப்படையில் நஷ்டஈடு கொடுக்க முன்வந்தால் எவ்விதத் தகராறும் ஏற்படாது. அப்படி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து : இதுவரை விலையைப்பற்றி எந்தவிதமான புகாரும், எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.

சும்மாக் கிடக்கிற நிலத்தை எடுக்க நடவடிக்கை எடுத்தவுடனேயே வாழை போட்டுவிடுவது, தென்னை போட்டுவிடுவது,—பச்சைப் பசேல் என்று இருக்கிற இந்த இடத்தை எடுக்கக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிப்பது, சட்டமன்ற உறுப்பினர்களே வந்து ஸ்டே கொடுக்கவேண்டுமென்று கேட்பது என்பதாகத்தான் இருக்கிறதே தவிர—விலையில் புகார் இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : வரக்கால்பட்டு அரிசன மக்கள் காலனியில் மழைக்காலத்தில் பெண்ணையாறு வெள்ளம் பாய்ந்துவிடுகிற காரணத்தினால் வேறு இடம் வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் சரியான மேடான இடத்தைத்தான்

1970 ஏப்ரல் 3]

எடுத்தார்கள். அந்த நிலச்சுவான்தாரர் ஆட்சேபித்தார் என்பதற்காக திரும்பவும் வேறு ஒரு இடம் எடுத்தார்கள். அது முன்பு இருந்த இடத்தைவிட பள்ளமானது என்பதனால் அரிசன மக்கள் வேண்டாம் என்றார்கள். திரும்பவும் எடுத்த இடம் பரியல் க்ரவுண்டாக இருந்த காரணத்தினால் அதற்கு அப்பால் வேறு ஒரு இடத்தை எடுக்கச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி போடவேண்டும். விளக்கம் தேவையில்லை, கேள்வி என்ன? துணைக் கேள்விகள் எத்தனை கேள்விகள் போடுவது? கேள்விகள். அதுவும் துணைக் கேள்விகள், கேட்கின்ற நேரத்திலே அங்கே நடந்திருக்கின்ற அத்தனை நிகழ்ச்சிகளையும்பற்றிச் சொல்வதற்காகப் பயன்படுத்தக்கூடாது. குறிப்பிட்ட கேள்வியைப்பற்றி மட்டும் சுருக்கமாகக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: முதலிலே குறிப்பிடப்பட்ட வரக்கால்பட்டு கிராமத்திலே கொடுக்கப்பட்ட நிலங்கள் பற்றி ஒரு குறையும் இல்லை. இருந்தாலும் அவர்கள் போக மறுத்தார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட தேவன்குடி கிராமத்தினைப் பொறுத்தவரையில் கனம் கோவிந்தராசன் அவர்களே ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அவர்கள் கூறியது நியாயமற்றது என்று நாம் மீண்டும் புனர் பரிசீலனை செய்துவிட்டுத் தெரிவித்தோம். அந்த இடத்தையும் மறுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் போன்றவர்கள் ஒத்துழைத்தால் அந்த இடத்தை எடுத்துக் கொடுப்பதில் காலதாமதமோ வழக்கோ ஏற்படாது.

திருமயம் வட்டத்திலுள்ள அரிசன குடியிருப்புகள்

***663 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள, திருமயம் வட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள அரிசனக் காலனிகளில் குடியிருக்க முடியாமல் இடிந்து போனவை எத்தனை? எங்கெங்கே?

(இ) அவற்றைச் சீர்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) மேலதானியம் கிராமத்திலுள்ள ஒரு குடியிருப்பில் ஆறு வீடுகள் இடிந்து போய்விட்டன.

(இ) இதற்கான கோரிக்கை எதுவும் அக்குடியிருப்பு வாசிகளிடமிருந்து வரவில்லை.